# இலங்கை துறைமுக அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவிக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பதவி 1 பொறியியல் அலுவலர் JLM (திருகோணமலை துறைமுகத்திற்கு)

**(அ) தகுதித்திரன்**

உந்து சக்தி (Propultion Power) கிலோ வோட் 2000 (KW) வரையிலான கரையோரக் கலமொன்றில் பொறியியல் அலுவலரொருவராக (Officer in charge of an Engineering Watch) சேவையில் ஈடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலியா அல்லது இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**

உந்து சக்தி (Propultion Power) கிலோ வோட் 3000 (KW) வரையிலான கரையோரக் கலமொன்றில் பொறியியல் அலுவலரொருவராக (Officer in charge of an Engineering Watch) இரண்டு (02) வருட கடற் பயண அனுபவம்.

**(ஆ) சம்பளம்**

| | | |
|---|---|---|
| சம்பள வகையீடு | : | (JLM) |
| ஆரம்பச் சம்பளம் | : | ரூ. 75,065/- |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : | ரூ. 1,440/- |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாத மொத்தச் சம்பளம் ரூ. 150,500/- அளவினதாக இருக்கும்

**வயதெல்லை:** 45 வயதிற்கு விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும் (இவ்வயதெல்லை அரச சேவை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனேவ விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்பட கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெருபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்), மனித வளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகார சபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2024.06.04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்கள் உடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள/கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்.**